# அரசு ஊழியர்களுக்கு அமுதம் போன்ற அக்கார அடிசிலை அள்ளி வழங்கினார் அன்புத் தளபதியார்!

மங்கலம் பொங்கும்
மார்கழி மாதத்தில்
பொங்கி வழிகிறது
பூரிப்பு,
அரசு ஊழியர்கள்
ஆசிரியர்கள்
அகமெல்லாம் முகமெல்லாம்
அவர்களின் வீடெல்லாம்!

ஆனந்தத் தேன்கடலில்
அமுத அலைகள்
ஆர்ப்பரித்து எழுந்து
ஆகாயம் தொடும் உணர்வு
அத்தனைபேர் நெஞ்சிலும்
அணைகட்டி நிற்கிறது!

இருபத்து இரண்டு ஆண்டுகள்
இருண்டு கிடந்த உலகம்
திடீர் விடியலுக்குத்
திரும்பிய பரபரப்பை
உள்வாங்கி மகிழ்ந்த
உணர்ச்சிக் கொந்தளிப்பில்..

கண்கள் பனிக்கக்
கன்னங்கள் குளிக்க
வாயுறை வாழ்த்து
வான்வரை ஒலிக்க
அரசு ஊழியர்கள்
அத்தனை பேரும்
அன்புப் பிழம்பாகி
ஆனந்தக் குழம்பாகி
நன்றிப் பெருக்கில்
நனைந்திருக்கிறார்கள்!

திறக்க முடியாத
திசைகளையும் திறக்கும்
திறமை படைத்த
திக்குகளின் புதல்வர்
திராவிட மாடல் முதல்வர்
இணைவைக்க முடியாத
இயக்கத்தின் தலைவர்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
ஒன்பது லட்சம் ஊழியர்களின்
உழைப்புத் தோள்களில்
உற்சாக மாலையிட்டு
உயர்ந்து நிற்கிறார்!

'உரிமைப் போராட்டத்தின்
உண்மைத் தன்மையை
உணரத் தலைப்படும்
ஓர் அரசு
தீட்சண்யத்தையும்
காருண்யத்தையும்
கண்களாய்க் கொண்டுதான்
கடமையாற்றும்'
என்பதற்கான
அழுத்தமான உதாரணத்தை
வரலாற்றுப் பதிவாக்கி
வாழ்த்துகளை
வாரிக் குவித்துள்ளார்,
வாகை சூடவே
வந்து பிறந்துள்ள நம்
முதலமைச்சர்!

கூட்டாட்சித் தத்துவத்தின்
கோட்பாட்டைப் புறந்தள்ளி
நிதிகளை முடக்கி
நித்தமும் பிழைசெய்யும்
நடுநிலை அற்ற
நடுவண் அரசின்
மாற்றாந்தாய்ப் போக்கால்
மனம்சலித்துப் போகாமல்..

ஆற்றலின் உச்சத்தை
அன்றாடம் நிரூபிக்கும்
ஆட்சித் திறமுடையார்
அரசோச்சும் வரமுடையார்
காட்சிக்கு எளியராய்க்
கடனாற்றும் குணமுடையார்
சூழ்ச்சிக்கும் வஞ்சனைக்கும்
சோராத மனமுடையார்
இன்று
வாழ்ச்சிக்கு உரியவராய்
வரலாறு படைத்துள்ளார்!

மதிச்சுமையால் கனக்காத
தலைபடைத்த நம்தலைவர்
'நிதிச்சுமையை அரசு ஏற்கும்'
என்று
நெஞ்சுயர்த்தி அறிவித்து
நிறமாலை அணிந்துள்ளார்!
இது
உழைப்பாளர்களை ஏத்தும்
உன்னத அரசென்னும்
புகழ்மாலை புனைந்துள்ளார்!

ஆழ்வார்கள் போற்றும்
ஆழிமழைக் கண்ணனைப் போல்
'ஆட்சித் துறைகளை
ஆள்வார்கள்' போற்றும்
மன்னவனாய் இன்று
மகுடம் சூடி..
பாடாண் திணைக்கான
பாடுபொருள் ஆகியுள்ளார்!

கோயில்கள் தோறும்
கூடாரவல்லி
கொண்டாடும் நேரத்தில்..
வாயில்கள் தோறும்
வண்ணக் கோலமிட்டு
வாச மலரிட்டு
வணங்குகிற தருணத்தில்..

வாயெல்லாம் மனமெல்லாம்
வாழ்க வாழ்கவென்று
தாயெல்லாம் சேயெல்லாம்



தலைவரைக் கொண்டாடித்
தழைப்பதைக் கண்டாடித்
தன்னிறைவில் நிமிர்கிறது
தங்கத் தமிழ்நாடு!

அரசுப் பணியாளர்
அனைவர்க்கும் தாயாகி
சிரசேற்றுப் போற்றும்
தெய்வமும் தானாகி
அரசியல் வானத்தின்
அழகான நிலவாகி
சாதனைச் சிகரத்தின்
சத்திய வடிவாகி
'ஆகா.. இவர்தலைவர்!
அடுத்தும் இவர்முதல்வர்!'
என்னும் முழக்கங்கள்
எங்கும் உருவாகிப்
பொங்குதமிழ் நாடே
பொலிவுற்று நிற்கிறது
இப்போது!

அழகர் கோயில்
ஆண்டவருக்கு
ஆண்டாள் படைக்க விரும்பிய
அக்கார அடிசிலை
அண்ணல் ராமானுஜர்
அண்ணனாய் இருந்து
அன்பு கலந்து படைத்தார்,
நுணுக்கரிய உணர்வோடு
நூற்றாண்டு பலகடந்தும்!

அதுபோல்
ஆண்டுபல கடந்தும்
அவலத்தில் உழன்றும்
அருளுக்கு ஏங்கிய
அரசு ஊழியர்களின்
ஆசிரியச் சான்றோர்களின்
உரிமைப் பசிக்கு
உழுவலன்போடு
அக்கார அடிசிலை
அள்ளி வழங்கிய
தக்கார் இவரென்றும்
தலைமைப் பண்பிலே
மிக்கார் இவரென்றும்
மேதினியே புகழ்கிறது!

'மூன்று சுடர்களிலும்
முதற்சுடர் சூரியன்!
அஃதே போல்
தோன்று தலைவர்களில்
தோளுயர்த்தி நின்று
நினைத்ததை முடிக்கும்
நெஞ்சுரம் கொண்ட
நேரியன் ஸ்டாலின்' என்று
மெய்க்கீர்த்தி வரைந்து
மெய்சிலிர்க்கப் போகிறது
எதிர்காலம்!

இந்தியத் தாயின்
திருமுகத்தில் இட்ட
திலகம் போலத்
திகழும்
திராவிட மாடல் அரசு
தன்மக்கள் தளர்வதை
ஒருபோதும் ஏற்காது
தமக்கான போரில்
ஒருபோதும் தோற்காது
என்பதைப்
பல்வேறு வடிவங்களில்
பறைசாற்றிக் கொண்டிருக்கிறது!

கேட்டுக் கொடுப்பது
மட்டுமல்ல
கேட்காமல் கொடுப்பதும்
செங்கோன்மைக்கு அழகென்று
சீர்மிகுந்த நலத்திட்டம்
செம்மாந்து கொடுத்துவரும்
சீர்திருத்தத் தளபதியார்..
கேட்டுக் கொடுத்ததைக்
'கேக்'குடன் கொடுத்தார்!
கேட்டவர் கொடுத்த
'கேக்'கையும் சுவைத்தார்!
கேட்க வந்தவரும்
'கேக்'குண்டு மகிழ்ந்தார்!

கேட்டவர் கொடுத்தவர்
கேண்மை உணர்வினை
வேட்டவர் எல்லாம்
வெளிச்சத்தில் மிதந்தார்!

தூரத்தில் இருந்து
தூபம் போட்டவர்
அத்தனை பேரும்
தலையில் துண்டைப்
போட்டவர் ஆகிப்
'பொத்'தென்று விழுந்தார்!

பொங்கல் பரிசளித்துப்
புகழ்மலையின் முடிமீதில்
தங்குதடை இல்லாமல்
தமிழ்க்கொடி பறக்கவிட்டுச்
சிங்கம்போல் அமர்ந்துள்ளார்..
நம்
சீரிய முதலமைச்சர்!

'தேனகத்து மலர்முகத்தில்
தெரிகின்ற பூரிப்பை
வானகத்து நிலவோடு
வைத்துப் பார்த்தாலும்

வெண்ணிலவு பின்தங்கும்
எம்முகமே எழில்பொங்கும்'
என்று ஊழியர்கள்
இன்புற்று மகிழ்கின்றார்!

காலப் பேரேட்டில்
'கலைஞருக்குப் பின்னால்
பெரியாரும் அண்ணாவும்
பிரிவறக் கலந்த
மற்றுமொரு கலைஞர்
மலர்ந்துள்ளார்... அவர்தான்
மூவரையும் வென்ற
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்'
என்று
பொன்னெழுத்துச் சுடர்களில்
புகழ்ச்சொற்கள் மின்னும்!
இவர் ஆட்சியே
இன்றுபோல் தொடரும்
இன்னும்!

இவர் வாழி நூற்றாண்டு!
இவர் ஆட்சியும் நூற்றாண்டு!
இவர்புகழைப் பாடிவரும்
இன்னும்பல.. நூற்றாண்டு!

**முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.**
ஒன்றிய முன்னாள்
இணையமைச்சர்



---

### வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் 58 ஆக்கிரமிப்பு வீடுகளுக்கு

## மாற்றுக் குடியிருப்புகள் வழங்குவது குறித்து ஆய்வுக் கூட்டம்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜன.6-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி நேற்று (05.01.2026) இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-71க்குட்பட்ட மேட்டுப்பாளையம் விளையாட்டுத் திடலினை மேம்படுத்துவது குறித்து நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள வில்லிவாக்கம், அன்னை சத்யா நகர் அருகில் வசிக்கும் 58 ஆக்கிரமிப்பு வீடுகளுக்கு மாற்றுக் குடியிருப்புகள் வழங்குவது குறித்து வி.க. நகர் மண்டல அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற அனைத்து துறை அலுவலர்களுடனான கூட்டத்தில், அலுவலர்களுக்கு உரிய ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் சேத்துப்பட்டு, மீனாம்மாள் சிவராஜ் நகர் (எம்.எஸ்.நகர்) திட்டப்பகுதியில் நடைபெற்று வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு கட்டடப் பணியின் இறுதிக் கட்டப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், இராயபுரம் மண்டலம், வார்டு-56க்குட்பட்ட பி.ஆர்.என். கார்டன் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் வருகைப் பதிவேட்டை பார்வையிட்டு, அங்கு சிகிச்சைக்கு வரும் பொதுமக்களிடம் வழங்கப்படும் மருத்துவச் சிகிச்சைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

இந்நிகழ்வுகளில் மேயர் திருமதி ஆர். பிரியா, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் வெற்றி அழகன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர்கள் கூ.பி.ஜெயின், பி.ரீராமுலு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர் இளம்பருதி, செயற்பொறியாளர் ஜானி சாம்ராஜ், மண்டல அலுவலர் ஜி. சொக்கலிங்கம் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (5.1.2026) அமைச்சர் பி.கே.சேகர்பாபு சேத்துப்பட்டு, மீனாம்பாள் சிவராஜ் நகர் (எம்.எஸ். நகர்) திட்டப்பகுதியின் இறுதிக் கட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மேயர் பிரியாராஜன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி.ஸ்ரேயா பி. மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், மண்டலக் குழுத்தலைவர் கூ.பீ. ஜெயின், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர் இளம்பரிதி, செயற்பொறியாளர் ஜானி சாம்ராஜ் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

### பொங்கல் பரிசுத் தொகுப்பு –

## புதிய ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்துள்ள முதல்வருக்கு நன்றி!

### எர்ணாவூர் நாராயணன் அறிக்கை!



சென்னை, ஜன.6-

சமத்துவ மக்கள் கழக நிறுவனத் தலைவர் எர்ணாவூர் நாராயணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

2026 பொங்கல் பரிசுத் தொகுப்புக்கு ரூ.248 கோடி நிதியை ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

உலகத் தமிழர்களால் பன்னெடுங்காலமாகக் கொண்டாடப்படும் பாரம்பரிய உன்னத விழா பொங்கல் திருநாள்.

பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிட தமிழ்நாடு அரசு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் மகிழ்ச்சியான செய்தியை தமிழக அரசு அறிவித்துள்ளது.

இன்பம் பொங்கும் தமிழ்நாடு' என்று ஒவ்வொரு இல்லத்தின் வாசலிலும் வண்ணக் கோலமிட்டு, தை மகளை வரவேற்போம். தமிழ்த் தாயைப் போற்றிடுவோம்! மகிழ்ச்சிப் பெருவிழாவாகப் பொங்கலைக் கொண்டாடுவோம்! என தமிழக முதல்வர் அவர்கள் அறிவிப்புடன், ரேஷன் கார்டு பெற்றுள்ள குடும்பங்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புடன் ரொக்க தொகையாக தலா ரூபாய் 3000 வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை சமத்துவ மக்கள் கழகம் சார்பாக வரவேற்கிறேன்.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் 23 ஆண்டுகால கோரிக்கையான புதிய ஓய்வு திட்டம், அறிவித்த ஓய்வூதியம் செயல்படுத்துவதற்கு முன்பு இடைப்பட்ட காலத்தில் ஓய்வூதியமின்றி பணி ஓய்வு பெற்றவர்களுக்கு கருணை ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான அறிவிப்பை வெளியிட்டு உழைக்கும் வர்க்கத்தின் கோரிக்கைகளை ஏற்று சமூக பாதுகாப்பு திட்டமான ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்திய தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



05.01.2026 – திருப்பூர் மாவட்டம், லக்ஷ்மி மஹாலில் ‘ மடிக்கணினி வழங்கும் மாபெரும் விழா ‘ கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தை கழகத் தலைவர் –தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி வாயிலாக துவங்கி வைத்தார். இந்நிகழ்வில் கழக துணை பொது செயலாளரும், செய்தித்துறை மற்றும் தமிழ்வளர்ச்சித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. கயல்விழி செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ – மாணவிகள், கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.